**12.11.2025.**

**O.S.No.143/2018**

**பி.வா.சா.2 : சக்திவேல்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) 1ம் வாதி சரஸ்வதி அம்மாள் பிரதிவாதி பழனிவேல் அவர்களுக்கும் 22.05.2012ம் தேதிய கிரய ஒப்பந்த பத்திரம் சம்மந்தமாக தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். கிரய ஒப்பந்த தேதியில் இருந்து உள் வாய்தா 18 மாதங்கள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரய ஒப்பந்த தேதியில் இருந்து உள் வாய்தா 18 மாதங்கள் முடிவது 22.11.2013 என்றால் சரிதான். மேற்படி உள்வாய்தா தேதியில் இருந்து 23.11.2013 முதல் 22.11.2016 வரைக்கும் பிரதிவாதி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 22.05.2012 முதல் 22.05.2024 வரைக்கும் அட்வான்ஸ் தொகை திருப்பிதரக் கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரவிந்திரன் சரஸ்வதியின் பேரன் என்றால் சரிதான். ரவிந்திரனின் மனைவி தான் துர்கா தேவி. வாதிகள் காலம் கடந்த ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்ய கோரியும் மற்றும் கடன் வாங்கும்போது கொடுத்த வெற்று காசோலைகளை திருப்பி தரகோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு ரவிந்திரன் மீது ரூ.7 லட்சமும் மற்றும் துர்காதேவி மீது ரூ.6 லட்சமும் காசோலை மோசடி வழக்கு பழனிவேல் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளிலும் நான் பழனிவேல் தரப்பில் சாட்சி அளித்தேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் பழனிவேல் 1ம் வாதியை எந்த தேதியில் சந்தித்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் கால நீட்டிப்பு செய்ததாக சொல்வதற்கு எந்த இடத்தில் கால நீட்டிப்பு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் 1 வருடம் கால நீட்டிப்பு செய்யததாக சொன்னார்கள். ஆனால் அசல் விற்பனை ஒப்பந்த பத்திரத்தை காட்டி

கேட்கும்போது அதில் எவ்விதமான குறிப்பும் இல்லை என்று சாட்சி சொல்கிறார். எனக்கும் பழனிவேலுக்கும் 15 வருடங்களுக்கு மேல் பழக்கம்.

3) காசோலை மோசடி வழக்கில் ரவிந்திரன் மற்றும் துர்காதேவியிக்கு கடிதம் எழுதி தந்ததாகவும் அதை நான் தான் எழுதியதாக நான் சாட்சி சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகளை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கடன் கொடுத்ததாக சொல்லி அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் தான் மேற்படி 2 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 24.03.2017 தேதியில் மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்திற்கான முன்பணம் ரூ.1 லட்சம் வட்டியுடன் சேர்த்து 1 லட்சத்தை 25 ஆயிரம் ரங்கசாமி மகன் வேலு என்பர் முன்னிலையில் கொடுத்ததாக சொல்லி உள்ளார் என்றால் அது தவறு. இந்த நீதிமன்றத்திற்கும் அந்த சாசோலை மோசடி வழகது நீதிமன்றத்திற்கும் ஒவ்வொரு முறையும் நான் பழனிவேலுடன் வருவது வழக்கம் என்றால் சரியல்ல.

4) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 4.75 லட்சம் பேசப்பட்டதாகவும் 1.75 லட்சம் அன்வான்ஸ் கொடுக்கப்பட்டதாகவும் மீதி தொகை ரூ.3 லட்சம் என்று பேசப்பட்டது என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்துள்ள ரூ.3 லட்சம் முன்பணம் கொடுத்ததமாகவும் மீதி பணம் 1.75 லட்சம் மீதம் உள்ளதாகவும் சொல்லி உள்ளது தவறு என்றால் சரிதான். பழனிவேல் உண்மையிலேயே வாதியிடம் அன்வான்ஸ் தொகை வாங்கி கொண்டு பத்திரத்தை ரத்து செய்து தருவதாக சொல்லி விட்டு தற்போது ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் உள்ளதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே தான் பழனிவேல் மேற்படி கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுக பரிகாரமோ கிரய முன்பணத்தை திரும்ப கோரி வழக்கோ இது நாள் வரை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டாவது பழனிவேல் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் கிரய ஒப்பந்தத்தின்

அடிப்படையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் பிரதிவாதிக்கு மிகவும் நெருங்கியவர் என்றும் குடும்ப நண்பர் என்பதால் நான் அந்த வழக்கிலும் கடிதத்தை தயார் செய்து பொய் சாட்சியம் அளித்தேன் என்றும் இந்த வழக்கிலும் சாட்சி கையெழுத்து போட்டு பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.12 17:38:52 +0530

**Subordinate Judge, Attur.**